தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 31 | 4 Pages | 31.8.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 31 | 4 பக்கங்கள் | 31.8.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி**
**ஆங்கில்லை ஊன்றின் பவர்க்கு**

**விளக்கம்:**

**பொருளுடையவராக இருக்கும் சிறப்பு அப்பொருளை வைத்துக் காப்பாற்றாதவர்க்கு இல்லை, அருளுடையவராக இருக்கும் சிறப்பு புலால் தின்பவர்க்கு இல்லை.**

## காற்று மாசுபாடு காரணமாக இந்தியர்கள் வாழ்நாளில் 3.4 வருடங்களை இழக்கும் அபாயம்: ஆய்வில் தகவல்

அமெரிக்கா, ஆக. 31

அமெரிக்காவில் உள்ள சிகாகோ பல்லைக்கழகம் நடத்திய ஆய்வில், இந்தியாவில் காற்று மாசு தொடர்ந்து நீடித்து வந்தால் மக்கள் வாழும் தங்கள் வாழ்நாளில் 3.4 ஆண்டுகளை இழக்க நேரிடும் எனத் தெரிவித்துள்ளது.

2021ம் ஆண்டின்காற்று மாசுப்பாட்டை காட்டிலும் 2022ம் ஆண்டில் காற்று மாசுபாடு 19.3 சதவீதம் அளவிற்கு குறைந்துள்ளது. காற்று மாசுபாடு இப்படியே நிலைத்திருந்தால் இந்தியாவில் வாழும் மக்கள் சராசரியாக 3.4 வருட வாழ்நாளை இழக்க நேரிடும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக வங்கதேசம் அதிக மாசுபாடு கொண்ட நாடாக இருப்பதாக தெரிவித்துள்ள நிலையில், அந்த அறிக்கை வளர்ந்து வரும் அதிக மக்கள் தொகையின் காரணமாக காற்று மாசுபாட்டிற்கான சுமையை இந்தியா எதிர்கொள்கிறது.

இந்தியாவின் மிகவும் மாசுபட்ட பகுதி வடக்கு பகுதி ஆகும். இது 50 கோடிக்கும் அதிகமான மக்கள் மற்றும் நாட்டின் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 40 சதவீதம் பேர் வசிக்கும் பகுதியாகும். 2022ம் ஆண்டில் இந்தப் பகுதியில் காற்று மாசுவின் தரநிலை அளவு 17.2% குறைந்தாலும், இந்த மாசு நிலைகள் நீடித்தால் மக்கள் வாழ்நாளில் 5.4 ஆண்டுகளை இழக்க நேரிடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய முன்னேற்றங்கள் தொடர்ந்தால் ஆயுட்காலம் 1.2 ஆண்டு அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தாலும் கூட, மேலும் மேலும் காற்று மாசுபடுவதை குறைக்கும் அவசியத்தை நிலைமை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

வடக்கு பகுதி தாண்டி மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான் அதிக காற்று மாசுபாட்டை எதிர்கொள்ளும் மாநிலங்களாக திகழ்கிறது. இங்கு சராசரியாக 29.23 கோடி மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் தங்களுடைய ஆயுட்காலத்தில் 2.9 வருடங்களை இழக்க நேரிடும்.

தெற்கு ஆசியாவை பொறுத்த வரைக்கும் கடந்த 20 ஆண்டுகளில் 2022ல் காற்று மாசுபாடு 18 சதவீதம் குறைந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெலன்ஸ்கியின் போர் முடிவு திட்ட பேச்சை புறந்தள்ளிய ரஷியா: சண்டை நீடிக்கும் என அறிவிப்பு



ரஷ்யா, ஆக. 31

ரஷியா உக்ரைன் மீது படையெடுத்து இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகிறது. இதுவரை இரு நாடுகளுக்கு இடையில் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தை நடைபெறவில்லை.

இந்த நிலையில்தான் ரஷியாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் ராணுவம் மூன்று வாரங்களுக்கு முன் நுழைந்தது. அப்பிராந்தியத்தில் உள்ள ஏராளமான குடியிருப்பு பகுதிகளை தங்கள் வசப்படுத்திய உக்ரைன ராணுவம், ரஷியாவின் ராணுவ வீரர்களையும் பிடித்து வைத்துள்ளனர். இதனால் இரு நாடுகளுக்கு இடையிலான சண்டை தற்போது மேலும் வலுப்பெற்றுள்ளது. இந்த நிலையில்தான் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி "தன்னுடைய திட்டத்தை (திட்டத்தை முழுமையாக வெளிப்படுத்தவில்லை) அமெரிக்க அதிபர் முன் எடுத்து வைப்பேன். மேலும் அவரை தொடர்ந்து விரைவில் அதிபராக இருப்பவர்களிடமும் எனது திட்டத்தை கூறுவேன் எனத் தெரிவித்திருந்தார்.

மேலும் "ரஷியாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் ஊடுருவியது என்னுடைய திட்டத்தின் ஒரு பகுதி. இது பொருளாதாரம் மற்றும் டிப்ளோமேடிக் ஆகியவற்றை உள்ளடக்கியாகும்.

அமெரிக்கா வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஆயுதங்களை பயன்படுத்தி ரஷியாவின் உள்பகுதிகளை (ரஷியாவின் மையப்பகுதி) தாக்க அமெரிக்காவிடம் அனுமதி கேட்பேன். இதன் மூலம் ரஷியாவை போர் முடிவுக்கான பேச்சுவார்த்தைக்கு தள்ள முடியும். இதுதான் என்னுடைய யோசனை" என ஜெலன்ஸ்சி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஜெலன்ஸ்கி திட்டம் குறித்த கேள்விக்கு ரஷியா அதிபர் மாளிகை செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் பதில் அளிக்கையில் "எங்களுடைய இலக்கை அடையும் வரை எங்களுடைய சிறப்பு ராணுவ நடவடிக்கை என அழைக்கப்படும் உக்ரைன் மீதான சண்டை தொடர்ந்து நடைபெறும். உக்ரைனின் பிரதிநிதிகளிடமிருந்து இதுபோன்ற அறிக்கைகளைக் கேட்பது இது முதல் முறை அல்ல. இந்த கீவ் ஆட்சியின் தன்மையை நாங்கள் அறிவோம்" என்றார்.

தற்போது உக்ரைன படைகளை குர்ஸ்க் பிராந்தியத்தில் வெளியேற்றுவது ரஷியாவின் முதன்மையாக நோக்கமாகும். உக்ரைன் ஊடுருவலை தொடர்ந்து ரஷியா தாக்குதலை அதிகரித்துள்ளது.

## டெலிகிராம் சிஇஓ கைது எதிரொலி: ரபேல் போர் விமான ஒப்பந்தத்தை ரத்துசெய்த யுஏஇ

அபுதாபி, ஆக. 31

உலகின் பிரபல செய்தி பரிமாற்ற சமூக ஊடகமான டெலிகிராம் நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் சிஇஓ ஆக இருக்கும் பாவெல் துரோவ் பாரிஸ் அருகே உள்ள விமான நிலையத்தில் வைத்து பிரான்ஸ் போலீசால் கைது செய்யப்பட்டார்.

செயலியின் மூலம் நடக்கும் சட்டவிரோத செயல்களுக்கு டெலிகிராம் துணை போகிறது, பயங்கரவாதத்துக்கு ஆதரவு அளிக்கிறது, பயனர்களின் தரவுகளை அரசுகளிடம் இருந்து பாதுகாக்கிறது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் பாவெல் கைது செய்யப்பட்டுள்ளார். பாவெல் துரோவை தற்போது நீதிமன்ற காவலில் தடுத்து வைத்து போலீஸ் விசாரணை நடத்தி வருகிறது.

இதற்கிடையே, இந்தக் கைது நடவடிக்கை அரசியல் ரீதியானது இல்லை என பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்தார்.

இந்த கைது நடவடிக்கைக்கு எலான் மஸ்க் உள்ளிட்ட பெரும் புள்ளிகள் கண்டனம் தெரிவித்திருந்தனர். அதேபோல ரஷ்யாவும், துரோவ் கைதுக்கு கண்டனம் தெரிவித்து, அவரை மீட்பதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது.

இந்நிலையில், பிரான்ஸ் நாட்டியம் இருந்து ரபேல் போர் விமானங்களை கொள்முதல் செய்யும் திட்டத்தை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக தகவல் வெளியானது.

அபுதாபியில் பிரெஞ்சு கடற்படை தளம் இயங்கி வருகிறது. அதேசமயம், பிரான்சிடமிருந்து லெக்லெர்க் டாங்கிகள் மற்றும் ரபேல் போர்விமானங்களை கொள்முதல் செய்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பயன்படுத்தி வருகிறது. மேலும் சில போர் விமானங்களை வாங்க யுஏஇ அரசு பிரான்சுடன் ஒப்பந்தம் போட்டுள்ளது. துரோவ் கைது எதிரொலியால் இந்த ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்திவைப்பதாக யு.ஏ.இ. அறிவித்துள்ளது.

# முதலீட்டாளர் மாநாட்டுக்கு தயாராகிறேன் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தகவல்

சென்னை, ஆக. 31

முதலீடுகளை ஈர்ப்பதற்காக தமிழகமுதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து விமானம் மூலம் நேற்று முன்தினம் இரவு அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். தமிழகத்திற்கு பல்வேறு தொழில் முதலீடுகளைஈர்க்கமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 17 நாட்கள் அமெரிக்காவில் அரசு முறைப் பயணமாக சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்த பயணத்தின் போது அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ, சிகாகோவில் உள்ள பல முக்கிய நிறுவனங்களின் தொழிலதிபர்களைச் சந்திக்க உள்ளார். அப்போது முதல் அமைச்சரின் தலைமையில் முன்னணி நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

இந்தநிலையில் இன்று அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொள்ள உள்ளார். இதனிடையே உடற்ப




யிற்சி கூடத்தில் உடற்பயிற்சி செய்து வருவது போன்ற புகை படத்தை வெளியிட்டு உள்ள முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் சான் பிரான்சிஸ்கோவில் ஒரு விறு விறுப்பான நடைப்பயணத்துடன் நாளை தொடங்குகிறது. இன்று மாலை முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குத் தயாராகிறேன். என எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டு உள்ளார்.

## வைணவ கோவில்களுக்கு கட்டணமில்லா ஆன்மிக பயணம்; மூத்த குடிமக்கள் விண்ணப்பிக்கலாம்: அமைச்சர் சேகர் பாபு தகவல

சென்னை, ஆக. 31

தமிழகத்தில் உள்ள முக்கிய வைணவ கோவில்களுக்கு, புரட்டாசி மாதத்தில் மேற்கொள்ளப்பட உள்ள கட்டணமில்லா ஆன்மிக பயணத்தில் பங்கேற்க மூத்த குடிமக்கள் விண்ணப்பிக்கலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழகத்தில் மக்கள் தெய்வ வழிபாட்டை தொன்று தொட்டுப் போற்றி வருகின்றனர். பல்வேறு திருக்கோவில்களுக்கு ஒரே நாளில் சென்று வழிபடுவதை பெரும் விருப்பமாகக் கொண்டுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு, 2024 2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பில், ஆடி மாதத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோவில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் பிரசித்தி பெற்ற வைணவத் திருக்கோவில்களுக்கும் இறை தரிசனம் கிடைக்க இயலாத 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட தலா 1,000 பக்தர்கள் அழைத்து செல்லப்படுவர், இதற்கான செலவினத் தொகை ரூ.50 லட்சம் அரசு நிதியாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.



இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், சென்னை, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களில் அமைந்துள்ள முக்கிய வைணவத் திருக்கோவில்களுக்கு புரட்டாசி மாதத்தில் மேற்கொள்ளும் ஆன்மிகப் பயணத்தில் 1,000 மூத்த குடிமக்கள் கட்டணமின்றி (உணவு உட்பட) அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

புரட்டாசி மாத வைணவத் திருக்கோவில்களுக்கான ஆன்மிகப் பயணம் நான்கு கட்டங்களாக, அதாவது 21.09.2024, 28.09.2024, 05.10.2024, 12.10.2024 ஆகிய நாட்களில் தொடங்கப்பட உள்ளன. இந்த ஆன்மிக பயணத்தில் பங்கேற்க விரும்பும் மூத்தகுடிமக்கள் இந்து மதத்தை சார்ந்தவராகவும், 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்களை இந்து சமய அறநிலையத்துறையின் இணையதளமான *www.hrce.tn.gov.in*லிருந்து பதிவிறக்கம் செய்தோ அல்லது சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் நேரில் பெற்றோ விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களுடன் இணைத்து 19.09.2024க்குள் சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் ஒப்படைத்திட வேண்டும்.

ஆகவே, புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோவில்களுக்கு ஆன்மிக பயணம் செல்ல விரும்பும் மூத்த குடிமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு இறை தரிசனம் பெறலாம்."

இவ்வாறு அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

## விழுப்புரம் சங்கமம் லயன்ஸ் சங்கம் சார்பில் நீரிழிவு நோய் கண்டறியும் முகாம்: இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி, நிர்வாகி பங்கேற்பு

விழுப்புரம், ஆக. 31

நேற்று காலை 6.30 மணியளவில் நீரிழிவு நோய் கண்டறியும் முகாம் விழுப்புரம் நகரத்தில் நடந்தது. விழுப்புரம் சங்கமம் லயன்ஸ் சங்க தலைவர்.திரு.K.குமாரவேல் தலைமையில் நடந்தது. நிர்வாகிகள் திரு. திலிப் திரு. G.செந்தில்குமார் முன்னிலையில் முட்டத்தூர். ஒய்க்காப் மேனிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரி



யரும். இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி, விழுப்புரம் மாவட்ட நிர்வாகி முனைவர். ம. பாபு செல்வதுரை.

மற்றும் மருத்துவர் S.. பாலாஜி ஆகியோர் முகாம் ஒருங்கிணைப்பாளர்களின் அழைப்பை ஏற்று கலந்துகொண்டு தன்னார்வப் பணியாற்றினர். இது சுமார் 100 பொதுமக்கள் பயனடைந்தனர்.

## அறந்தாங்கியில் ஜூனியர் ரெட்கிராஸ் சொசைட்டி, ரோட்டரி சங்கங்கள் நடத்திய உலக அமைதி விழிப்புணர்வு பேரணி

அறந்தாங்கி ஆக. 31

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் ஜூனியர் ரெட்கிராஸ் சொசைட்டி மற்றும் ரோட்டரி சங்கங்கள் இணைந்து நடத்திய உலக அமைதி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

அறந்தாங்கி கல்வி மாவட்ட ஜூனியர் ரெட் கிராஸ் சொசைட்டி, மீமிசல் கிங்ஸ் ரோட்டரி, அறந்தாங்கி தி ஃபோர்ட் சிட்டி ரோட்டரி, அறந்தாங்கி ஃபிரண்ட்ஸ் ரோட்டரி ஆகிய சங்கங்கள் இணைந்து உலக அமைதிக்கான விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. அறந்தாங்கி தொடக்க கல்வி மாவட்ட அலுவலர் சாந்தி தலைமையில் ரோட்டரி மண்டல ஒருங்கிணைப்பாளர் சுரேஷ்குமார், துணை ஆளுநர் மருத்துவர் விஜய், அனைத்து வட்டார கல்வி அலுவலர்கள் முன்னிலையில்

ரெட்கிராஸ் அறந்தாங்கி செயலாளர் தமிழ்ச்செல்வன் அனைவரையும் வரவேற்றார். அறந்தாங்கி கல்வி மாவட்ட அலுவலர் ஜெயந்தி கொடியசைத்து பேரணியை துவக்கி வைத்தார். நூற்றுக்கணக்கான




ஜூனியர் ரெட்கிராஸ் சொசைட்டி மாணவ, மாணவிகள் உலக அமைதிக்காக முழக்கமிட்டு, பதாகைகள் ஏந்தி பேரணி சென்றனர். வெஸ்ட்லி பள்ளி வரை சென்று அங்கே மாணவ மாணவியர்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுதுள்ளனர்.

## ரூ.3.6 கோடியை வட்டியுடன் திருப்பிக் கொடுக்க நடிகர் விமலுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஆக. 31

'மன்னர் வகையறா' படத்தை தயாரிப்பதற்காகபெற்றரூ.3.6கோடியை, 18% வட்டியுடன்திருப்பிக் கொடுக்க நடிகர் விமலுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தனது A3V தயாரிப்பு நிறுவனம் மூலம் தான் தயாரித்த 'மன்னர் வகையறா' படத்துக்காக கோபி என்பவரிடம் ரூ.5 கோடி கடன் வாங்கியுள்ளார். இதில் ரூ.3.6 கோடியை குறிப்பிட்ட காலத்துக்குள் திருப்பிச் செலுத்துவதாக ஒப்பந்தம் செய்தபோதும், பணத்தை திருப்பிக் கொடு க்கவில்லை என குற்றம்சா ட்டப்பட்டு ள்ளது.

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை எப்போது கட்டி முடிப்பீர்கள்? நீதிமன்றம் கேள்வி

மதுரை, ஆக. 31

மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் கட்டுமான பணிகளை விரைந்து தொடங்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்கு மீதான விசாரணை இன்று நடைபெற்றது.

இந்த வழக்கு விசாரணையின்போது, "மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை எப்போது கட்டி முடிக்கப்படும். மதுரையில் எய்ம்ஸ் அமையும் என அறிவிப்பு வெளியாகி 5 ஆண்டுகள் ஆகிவிட்டது. கடந்த 5 ஆண்டுகளாக என்ன செய்தீர்கள்..? எப்போது கட்டி முடிப்பீர்கள்..?" என்று



ஐகோர்ட்டு சரமாரியாக கேள்வி எழுப்பியது.

அதற்கு, கொரோனா பொதுமுடக்கத்தை காரணம் காட்டிய மத்திய அரசு, மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டுள்ளது என்றும் கட்டுமானப் பணிகள் 2026ம் ஆண்டுக்குள் முடிந்துவிடும் என்றும் தெரிவித்தது.

கொரோனா 2022ம் ஆண்டிலேயே முடிவுக்கு வந்துவிட்டது. அதனைக் காரணம் காட்டாதீர்கள் என்று கண்டித்த சென்னை ஐகோர்ட்டு மதுரைகிளை, மதுரை மாவட்டம் தோப்பூரில் எய்ம்ஸ் கட்டுமானப் பணிகள் எப்போது தொடங்கி, எப்போது நிறைவடையும் என்பது குறித்து எழுத்துப்பூர்வமான விரிவான அறிக்கையை மத்திய சுகாதாரத் துறை செயலாளர் தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை அடுத்த மாதம் (செப்டம்பர்)24ம்தேதிக்கு ஒத்திவைத்தது.

# தேசிய விளையாட்டு தின விழா கொண்டாட்டம்

ராஜபாளையம், ஆக. 31

எ.கா .தா .தர்மராஜா பெண்கள் கல்லூரியில் தேசிய விளையாட்டு தின விழா சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் எ.கா .த .தர்மராஜா கல்வி குழுமங்களில் உள்ள பள்ளி மாணவ ,மாணவியர்களுக்கும் , கல்லூரி மாணவிகளுக்கும் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன .சிறப்பு விருந்தினராக அடல் ப்ரோக்ராம் ஒருங்கிணைப்பாளர் திரு .கணேஷ்ராம்




அவர்கள் கலந்துகொண்டு இந்தியாவில் உள்ள அனைத்து பள்ளி கல்லூரிகளில் விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்று சிறப்புரையாற்றினார்.கல்லூரி தாளாளர் அவர்களின் தாயார் திருமதி .ரமணி தர்மகிருஷ்ணராஜா மற்றும் கல்லூரி தலைவர் திருமதி. கீதா சிறப்பு விருந்தினரை கௌரவப்படுத்தினர்.கல்லூரி நிர்வாக உறுப்பினர்கள் டாக்டர் .சரவண கார்த்திகேயன், தீபிகா இவ்விழாவில் கலந்து கொண்டனர் .கல்லூரி முதல்வர் முனைவர் . ஜ மு ன ா . தலைமை உரையாற்றினார் . மாணவி காருண்யா வரவேற்புரை வழங்கினார் .

உடற்கல்வி இயக்குனர் ரெஞ்சுஷா அறிமுக உரையாற்றினார் .

உடற்கல்வி இயக்குனர் கண்மணி நன்றியுரை கூறினார் .

# ஜப்பான் ஆசிய விளையாட்டு போட்டி 'சர்பிங்'ல் மாமல்லபுரம் மாணவி தேர்வு

மாமல்லபுரம், ஆக. 31

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் மீனவர் பகுதி ஒத்தவாடை தெருவை சேர்ந்த சுகந்தி என்பவரின் மகள் கமலி (வயது 14). இவர் மாமல்லபுரம் செயின்ட் மேரீஸ் மெட்ரிக்குலேஷன் மேல்நிலை பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார்.

மீனவர் குடும்பத்தை சேர்ந்த இவர் தனது மாமா கடலில் சர்பிங் செய்வதை பார்த்து வளர்ந்ததால், அதன்மீது ஆர்வம் ஏற்பட்டு 2வயது முதலே சர்பிங் மற்றும் ஸ்கேட்டிங் பயிற்சி எடுக்க துவங்கினார்.

தொடர்ந்து வயது வாரியானபல்வேறுபிரிவுகளில் நடத்தப்பட்ட, மாநில,





தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று ஏராளமான பரிசுகள், பதக்கங்கள் பெற்றுள்ளார்.

இந்த நிலையில் மாலத்தீவில் நடந்த ஆசியன் சர்பிங் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்று 4 சுற்றுவரை முன்னேறி, இந்தியா சார்பில் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

தொடர்ந்து ஜப்பானில் 2026ம் ஆண்டு செப்டம்பர் 19ஆம் தேதி முதல் அக்டோபர் 4 ஆம் தேதி வரை16நாட்கள் நடைபெற உள்ள 20வது ஆசிய விளையாட்டு போட்டியில் பங்கேற்று விளையாடவும்தகுதி பெற்றுள்ளார்.

ஆசிய விளையாட்டு போட்டியிலும், ஒலிம்பிக் போட்டியிலும் முதன், முதலாக சர்பிங் போட்டி இடம் பெற்றுள்ள நிலையில், ஆசிய அளவிலான அந்த போட்டியில் பங்கேற்க செல்ல இருக்கும் மாமல்லபுரம் பள்ளி மாணவி கமலிக்கு அவர் படிக்கும் பள்ளியின் சார்பில் பள்ளி தாளாளர் பிரான்சிஸ், தலைமை ஆசிரியை பிருந்தா ஆகியோர் சிறப்பு செய்து, பரிசுத்தொகை வழங்க ஏற்பாடு செய்தனர்.

மாமல்லபுரம் மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் தமிழ்செல்வி சிறப்பு விருந்தினராக பங்கேற்று சந்தனமாலை, கிரீடம் அணிவித்து கவுரவித்தனர்.

# ஈரோட்டில் தனியார் பள்ளிக்கு வெடிகுண்டு மிரட்டல்

திருமங்கலம், ஆக. 31

மதுரை மாவட்டம் திருமங்கலம் பகுதியைச் சேர்ந்த சாப்ட்வேர் என்ஜினீயர் ராஜேஷ். இவரது மனைவி அபிநயா. தம்பதிக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வந்தனர். அதனைத் தொடர்ந்து, இருதரப்பினரும் திருமங்கலம் அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் புகார் அளித்து இருந்தனர்.

அப்போது, திருமங்கலம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்த கீதா இந்த வழக்கை விசாரித்து வந்தார். இதற்கிடையே, திருமணத்தின்போது தனது பெற்றோர் சார்பாக வழங்கப்பட்ட நகைகளை ராஜேசிடம் இருந்து வாங்கித் தருமாறு அபிநயா இன்ஸ்பெக்டர்கீதாவிடம்



கூறியுள்ளார்.

இதையடுத்து ராஜேஷ் தன்னிடம் இருந்த 95 பவுன் நகைகளையும் இன்ஸ்பெக்டர் கீதாவிடம், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பே கொடுத்துள்ளார்.ஆனால், அந்த நகைகளை அபிநயாவிடம் கொடுக்காமல், வேண்டுமென்றே இன்ஸ்பெக்டர் கீதா காலம் தாழ்த்தி வந்ததாக கூறப்படுகிறது.

இதனால் சந்தேகமடைந்த ராஜேஷ், திருமங்கலம் துணை போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் புகார் அளித்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் விசாரணை செய்தபோது, அனைத்து நகைகளையும் இன்ஸ்பெக்டர் கீதா தனது சொந்த தேவைக்காக தனியார் நிதி நிறுவனத்தில் ரூ.43 லட்சத்திற்கு அடகு வைத்திருந்தது தெரிய வந்தது.

அதனைத் தொடர்ந்து, நகையை திருப்பி தருவதற்கு இன்ஸ்பெக்டர் கீதா கால அவகாசம் கேட்டிருந்தார். பின்னர், கடந்த சில நாட்களுக்கு முன்பு அடகு வைத்த நகைகளில் சிலவற்றை மட்டும் திருப்பிக்கொடுத்துவிட்டு, மீதி 70 பவுனுக்கும் மேற்பட்ட நகையை தராமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்.

பின்னர், இந்த வழக்கு குறித்து விசாரித்த டி.ஐ.ஜி. ரம்யபாரதி, இன்ஸ்பெக்டர் கீதாவை பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்.

இந்தநிலையில் தற்போது வரை நகையை திருப்பித்தராத வழக்கில் இன்ஸ்பெக்டர் கீதாவை போலீசார் இன்று அதிரடியாக கைது செய்தனர். இந்த சம்பவம் மதுரை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கார் பந்தயம் நாளை தொடக்கம் பார்வையாளர்கள் இதெல்லாம் கொண்டு வர தடை

சென்னை, ஆக. 31

தமிழ்நாடுவிளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னையில் பார்முலா கார் பந்தயம் வருகிற சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. இந்தப் போட்டியை பார்வையிட வருவோர் பிறருக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய எந்தப் பொருளும் அரங்குக்குள் எடுத்து வரக் கூடாது. அப்படி எடுத்து வந்தால் பாதுகாப்பு சோதனைச் சாவடிகளில் பறிமுதல் செய்யப்படும். அவை திரும்பத் தரப்பட மாட்டாது. கூர்மையான பொருட்களான பிளேடுகள், கத்திகள், கத்திரிக்கோல் ஆயுதங்கள், பாக்கெட் கத்திகள் மற்றும் பெப்பர் ஸ்பிரே, பெரிய சங்கிலிகள், ஆயுதங்கள்துப்பாக்கிகள், சுவிஸ் ராணுவ கத்திகள் போன்றவற்றை கொண்டு வரக்கூடாது. மேலும் லேசர்ஸ்லேசர் லைட்டுகள், விலங்குகள் மற்றும் செல்லப்பிராணி






கள், ஒலி அமைப்புகள் ஏர் ஹார்ன்கள், விசில் போன்ற சத்தம் எழுப்பக் கூடிய பொருட்கள், மெகா போன்கள், இசைக்கருவிகள், போர்ட்டபிள் ஸ்பீக்கர்கள் ஆகியவற்றை கொண்டு வரத் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

தீப்பற்றக்கூடிய பொருட்களான தீப்பெட்டிகள், பட்டாசுகள், எளிதில் எரியக்கூடிய திரவங்கள், மதுபானம், போதைப்பொருள்எடுத்து வர தடை செய்யப்பட்டுள்ளது.

ஏதேனும் விதிமீறல் தெரிந்தால் பார்வையாளர்கள்காவல்துறையிடம் ஒப்படைக்கப்படுவர்.

புகையிலை பொருட்கள், அங்கீகரிக்கப்படாத விளம்பர பொருட்கள், பிளையர்கள், ஸ்டிக்கர்கள், கடற்கரை பந்துகள், பரிசுகள் போன்றவை, ஸ்லீப்பிங் பேக்ஸ், குடைகள் அல்லது நிழல் கட்டமைப்புகள், வெளிப்புற உணவு மற்றும் பானங்கள் அனுமதிக்கப்படாது.

குறிப்பாக தண்ணீர் பாட்டில்கள், கண்ணாடி பாட்டில்கள், மூடியுடன் கூடிய பிளாஸ்டிக் பாட்டில்கள், சீல் செய்யப்பட்ட தண்ணீர் பாட்டில்கள், திறந்த தண்ணீர் பாட்டில்கள், டின்கள், கேன்கள், டிரோன்கள்அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்படாத பறக்கும் சாதனம், புகைபிடிக்கும் சாதனங்கள் ஆகியவற்றை கொண்டு வரக்கூடாது.

தனியார் வாகனங்கள் ஸ்கேட்பார்டுகள், ரோலர் பிளேடுகள்,ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள், வண்டிகள் அல்லது தனிப்பட்ட மோட்டார் பொருத்தப்பட்ட வாகனங்கள் போன்றவை அனுமதி இல்லை.

உபகரணங்கள் கைப்பைகள், குடைகள், லேப்டாப், லேப்டாப் பைகள், சூட்கேஸ், பெரிய மின்விசிறிகள், மோட்டார் சைக்கிள் தலைக்கவசம், தலைக்கவசங்கள் போன்றவற்றுக்கு அனுமதி இல்லை.

சாதி, மதம், பாலினம், மதம் மற்றும் இனத்திற்கு எதிரான புண்படுத்தும் பதாகைகள் அல்லது தவறான, பாரபட்சமான மொழி, தொப்பிகள், பதாகைகள், கொடிகள் போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தம்பதியிடம் நகை அபகரிப்பு திருமங்கலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் அதிரடி கைது



சென்னை, ஆக. 31

சென்னை எழும்பூர்நாகர்கோவில் இடையேயும் மதுரைபெங்களூர் இடையேயும் வந்தே பாரத் ரெயில் சேவையை பிரதமர் மோடி வருகிற 31ந்தேதி காணொலிக் காட்சிமூலமாகதொடங்கி வைக்கஉள்ளார்.சென்னை சென்ட்ரலில் இருந்து இந்த வந்தேபாரத் ரெயில் சேவை தொடக்க விழா நடைபெற உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக ரெயில்வே நிர்வாகம் ஆலோசனை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில், இந்த இரண்டு ரெயில்கள் இயக்கப்படும் நேரம், நின்று செல்லும் ரெயில் நிலையங்கள் விவரம் உள்பட பல்வேறு தகவல்களை ரெயில்வேவாரியம்வெளியிட்டுள்ளது.

சென்னை எழும்பூர்நாகர்கோவில் இடையே வந்தேபாரத் ரெயில் சேவை (2062720678) வாரத்தில் புதன்கிழமை தவிர 6 நாட்கள் இயக்கப்படும். இந்த ரெயில் எழும்பூரில் இருந்து அதிகாலை 5 மணிக்கு புறப்பட்டு, நாகர்கோவிலை அதேநாள் மதி யம் 1.50 மணிக்கு அடையும்.

மறுமார்க்கமாக, இந்த ரெயில் நாகர்கோவிலில் இருந்து பிற்பகல் 2.20 மணிக்கு புறப்பட்டு, அதே நாள் இரவு 11 மணிக்கு எழும்பூர் ரெயில் நிலையத்தை வந்தடையும்.

இந்த ரெயில் தாம்பரம், விழுப்பு ரம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, கோவில்பட்டி, திருநெல்வேலி ஆகிய நிலையங்களில் நின்று செல்லும். இந்த ரெயிலில் 16 பெட்டிகள் சேர்க்கப்பட உள்ளன.

மதுரைபெங்களூரு கண்டோன்மெண்ட் இடையே வந்தே பாரத் ரெயில் சேவை (2067120672) வாரத்தில் செவ் வாய்க்கிழமை தவிர 6 நாட்கள் இயக்கப்பட உள்ளன.

இந்த ரெயில் மதுரையில் இருந்து அதிகாலை 5.15 மணிக்கு புறப் பட்டு, அதே நாள் மதியம் 1 மணிக்கு பெங்களூரு கண்டோன்மென்ட்டை அடையும். மறுமார்க்கமாக, இந்த ரெயில் பெங்களூரு கண் டோன்மெண்ட்ல் இருந்து மதியம் 1.30 மணிக்கு புறப்பட்டு, அதேநாள் இரவு 9.45 மணிக்கு மதுரையை சென்றடையும். இந்தரெயில் மதுரை, திண்டுக்கல், திருச்சி, கரூர், நாமக்கல், சேலம், கிருஷ்ணராஜபுரம் ஆகிய நிலையங்களில் நின்று செல்லும். இந்த ரெயிலில் 8 பெட்டிகள் இணைக்கப்பட உள்ளன. இவ்வாறு ரெயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# ராமேசுவரம் மீனவர்கள் 7 பேர் விடுதலை 2 பேருக்கு சிறை: இலங்கை நீதிமன்றம் உத்தரவு

மண்டபம், ஆக. 31

ராமேசுவரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் ஜூன் மாதம் 22ந்தேதி அன்று மீன் பிடிக்க சென்றனர். இவர்களில் ஒரு தரப்பினர் கச்சத்தீவுநெடுந்தீவு இடையே வலைகளை விரித்து மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி வந்ததாக கூறி ராமேசுவரம் மீனவர்களை அடித்து விரட்டினர். மேலும் மீன்பிடி சாதனங்களையும் சேதப்படுத்தினர்.

ரோந்து கப்பலை வைத்து படகுகளில் மோதச்செய்தனர். இதில் படகு உடைந்தது. இலங்கை கடற்படையினரின் நடவடிக்கையால் ராமேசுவரம் மீனவர்கள்



பாதியிலேயே கரை திரும்பினர். அப்போது எல்லை தாண்டி வந்ததாக கூறி ராமேசுவரத்தை சேர்ந்த ஈசாக் ராபின், செல்வகுமார் ஆகியோரின் விசைப்படகுகளில் மீன்பிடிக்க வந்திருந்த சகாய ராபர்ட்(வயது49), ராதா(44), முத்துராமலிங்கம் (51), யாக்கோபு (24), ஹரிகிருஷ் ணன் (50), இவரது மகன்கள் பொன் ராமதாஸ்(26), ராம்குமார்(24) மற்றும் லிபின் ராஜ் உள்பட 9 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். பின்னர் ஊர்க்காவல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்களது வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி எல்லை தாண்டி வந்ததாக கூறி ராதா(44), முத்துராம லிங்கம் (51), யாக்கோபு (24), இவரது மகன்கள் பொன் ராமதாஸ்(26), ராம்குமார்(24) மற்றும் லிபின்ராஜ் உள்பட 7 பேரை விடுதலை செய்து உத்தரவிட்டார். மேலும் மீண்டும் இதே போல் எல்லை தாண்டி மீன் பிடித்தால் சிறை தண்டனை விதிக்கப்படும் என எச்சரித்தார். தொடர்ந்து சகாய ராபர்ட்டுக்கு 1 வருட சிறை தண்டனையும், ஹரிகிருஷ்ணனுக்கு 18 மாத சிறை தண்டனையும் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

7 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் 2 மீனவர்களுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது அதிர்ச்சியைஏற்படுத்தியுள்ளது.

# வேதாரண்யம், நாகை மீனவர்களின் உபகரணங்களை பறித்துச் சென்ற இலங்கை கடற்கொள்ளையர்கள்

வேதாரண்யம், ஆக. 31

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த ஆறுகாட்டுத்துறை மீனவ கிராமம் லயன்ஸ் நகரை சேர்ந்தவர் சிவக்குமார்(40). இவர் தனக்கு சொந்தமான விசைப்படகில் ஆறுகாட்டுத்துறையில் இருந்து அதே பகுதியை சேர்ந்த சந்திரசேகரன்(40), ராஜகோபால்(50), அருண்குமார் (25), செம்போடையை சேர்ந்த சுப்பிரமணியன் (55) ஆகியோருடன் நேற்று மதியம் கடலில் மீன் பிடிக்க சென்றார்.வேதாரண்யம் கிழக்கே 16 நாட்டிகல் மைல் தொலைவில் நேற்று நள்ளிரவில் மீன் பிடிக்க வலையை விரித்து வைத்திருந்தனர். சில மணி நேரம் கழித்து வலையுடன் இணைக்கப்பட்டிருந்த மிதவை மிதந்து வந்தது. இதனால் மீனவர்கள் அதிர்ச்சியடைந்து பார்த்தபோது



பாதி வலையை காணவில்லை.

அப்போதுதான் பைபர் படகில் 3 இலங்கை கடற்கொள்ளையர்கள் 350 கிலோ எடையுள்ள வலையை வெட்டி எடுத்து சென்றது தெரிய வந்தது.

இதன் மதிப்பு ரூ.2 லட்சமாகும். இதனால் ஆறுகாட்டுத்துறை கடற்கரைக்கு இன்று காலை 6.30 மணிக்கு மீனவர்கள் வந்து மீனவ பஞ்சாயத்தாரிடம் தெரிவித்தனர். மேலும் வேதாரண்யம் மீன்வளத்துறை அதிகாரிகள் மற்றும் வேதாரண்யம் கடலோர காவல் குழும போலீசாரிடம் புகார் செய்தனர். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர். வேதாரண்யம் பகுதி மீனவர்களிடம் கடற்கொள்ளையர்கள் உபகரணங்களை பறித்து செல்வது இந்த மாதத்தில் இது 4வது சம்பவமாகும்.

மற்றொரு சம்பவம்: நாகை மாவட்டம் வேளாங்கண்ணி அடுத்த செருதூரை சேர்ந்தவர் சண்முகம். இவருக்கு சொந்தமான பைபர் படகில் அதே பகுதியை சேர்ந்த 4 மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு செருதூரில் இருந்து மீன் பிடிக்க சென்றனர். கோடியக்கரை தென் கிழக்கே 14 நாட்டிகல் மைல் தொலைவில் நேற்று நள்ளிரவு மீன் பிடித்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு 2 பைபர் படகுகளில் வந்த 7 இலங்கை கடற்கொள்ளையர்கள் கத்தியை காட்டி மிரட்டி நாகை மீனவர்களை தாக்கினர். பின்னர் படகில் வைத்திருந்த ரூ.3 லட்சம் மதிப்பிலான வலைகள் மற்றும் வாக்கி டாக்கி, செல்போன், ஜிபிஎஸ் கருவிகளை பறித்து சென்றனர். இன்று காலை செருதூருக்கு வந்த 4 மீனவர்கள், கீழையூர் கடலோர காவல் குழும போலீசில் புகார் செய்தனர். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# சீகூர் வனத்தில் 2 செந்நாய் உயிரிழப்பு



ஊட்டி, ஆக. 31

முதுமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட சீகூர் வனப்பகுதியில் 2 பெண் செந்நாய்கள் உயிரிழந்தன. இதுகுறித்து வனத்துறையினர் விசாரித்து வருகின்றனர். நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தில் புலி, யானை, சிறுத்தை, காட்டுமாடு, கழுதை புலி, செந்நாய் உள்ளிட்ட பல்வேறு வகையான அரிய வகை வனவிலங்குகள்,

பிணந்தின்னி கழுகுகள், பறவைகள் மற்றும் தாவரங்கள் உள்ளன. செந்நாய் கூட்டங்கள் கணிசமாக உள்ளன. இந்நிலையில், மசினகுடி வெளிமண்டலத்திற்குட்பட்ட சீகூர் வனச்சரக பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை வன ஊழியர்கள் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, ஆனைகட்டி பகுதியில் புதர் செடிகளை ஒட்டி 2 செந்நாய்கள் இறந்து கிடப்பதை பார்த்தனர்.

இதுதொடர்பாக உயர் அலுவலர்களுக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில், நேற்று மசினகுடி கோட்ட துணை இயக்குநர் அருண்குமார் தலைமையில் சீகூர் வனச்சரகர் தயானந்தன் மற்றும் வன ஊழியர்கள் உள்ளிட்டோர் நேரில் சென்று ஆய்வு செய்தனர். தெப்பகாடு வன கால்நடை மருத்துவர் ராஜேஷ், கால்நடை மருத்துவர் இந்துஜா ஆகியோர் வரவழைக்கப்பட்டனர். முதல் கட்ட ஆய்வில் 4 வயது மதிக்கத்தக்க பெண் செந்நாய்கள் என்பது தெரியவந்தது. இதனை தொடர்ந்து அவற்றின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு ஆய்விற்காக உடல் பாகங்கள் சேகரிக்கப்பட்டன. எந்த காரணத்தினால் இறந்தது என்பது குறித்து பிரேத பரிசோதனை அறிக்கைக்கு பின்னரே தெரியவரும் என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதனிடையே சீகூர் வனச்சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் ஒரு கரடி, ஒரு வயது மதிக்கத்தக்க ஆண் குட்டி யானை ஆகியவை உயிரிழந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் வனவிலங்கு நல ஆர்வலர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# அரசு மருத்துவமனைகளில் நிலவும் சுகாதார சீர்கேடுகளை சரி செய்ய வேண்டும்: எடப்பாடி பழனிசாமி



சென்னை, ஆக. 31

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சிங்காரச் சென்னை, சிங்கப்பூர் சென்னை என்றெல்லாம் வாய்நீளம் காட்டும் திமுக அரசின் அவலங்களில் ஒன்றாக சென்னை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை கழிவு நீரால் சூழ்ந்து, துர்நாற்றம் வீசுவதோடு நோய்த் தொற்று ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஊடகச் செய்திகள் வந்துள்ளன.

மருத்துவமனைக்குள் இருதயப் பிரிவு, நரம்பு மண்டலப் பிரிவு போன்ற முக்கிய துறைகளுக்கு அருகே கழிவு நீர் தேங்கியுள்ளது. குறிப்பாக, கழிவறைக்கு உள்ளே சென்று தண்ணீர் ஊற்றினால் அது வெளியில்தான் வருகிறது என்றும், அந்த கழிவு நீரை மிதித்துக்கொண்டே மீண்டும் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டுள்ள அறைக்குச் செல்கிறார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால், நோயாளிகளைப் பார்க்க வரும் உறவினர்களும் அந்தக் கழிவு நீரை மிதித்துக்கொண்டே மூக்கை பொத்தியபடி செல்கின்றனர். இது தவிர, இம்மருத்துவமனையில் உள்ள பெரும்பாலான கழிவறைகள் துர்நாற்றம் வீசுகிறது என்றும், கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்படவில்லை என்றும், இதன் காரணமாக பல இடங்களில் நோயாளிகள் கழிவறைகளைப் பயன்படுத்த முடியாத நிலை கடந்த ஒரு வாரமாக ஏற்பட்டுள்ளன என்று ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஓரிரு நாட்களுக்கு முன்பு ஐகோர்ட்டு மதுரைக் கிளை, மதுரை உட்பட காலியாக உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் முதல்வர் பணியிடங்களை நிரப்பக் கோரிய வழக்கில், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு முதல்வரை நியமனம் செய்ய இயலவில்லை எனில், மருத்துவக்கல்லூரிகளை திறப்பது ஏன் என்று திமுக அரசுக்கு சரமாரியாகக் கேள்விகளை எழுப்பிய செய்தி ஊடகங்களில் வெளிவந்தது.

ஏற்கெனவே, நான் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பல சுகாதாரப் பணியாளர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளதைக் குறிப்பிட்டு உடனடியாக ஏற்கெனவே கொரோனா காலத்தில் பணிபுரிந்தவர்களுக்கு முக்கியத்துவம் அளித்து அனைத்து காலிப் பணியிடங்களையும் நிரப்பவும், அரசு மருத்துவமனைகளில் மருந்துப் பொருட்கள் பற்றாக்குறை குறித்தும் அறிக்கைகள் மற்றும் பேட்டிகள் வெளியிட்டிருந்தேன்.

இனியாவது, சுகாதாரத்துறையில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களை உடனடியாக நிரப்பவும், நோயாளிகளுக்குத் தேவைப்படும் மருந்துகளை உடனடியாக வழங்கவும், ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை உட்பட தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளில் காணப்படும் சுகாதார சீர்கேடுகளை போர்க்கால அடிப்படையில் சீர்செய்திடவும் திமுக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலையில் லாரியில் இருந்து கொட்டிய உப்பு: பொதுமக்கள் அள்ளி சென்றனர்



ஆறுமுகநேரி, ஆக. 31

தூத்துக்குடி – திருச்செந்தூர் பிரதான சாலையில் ஆத்தூர் அருகே லாரியில் இருந்து சாலையில் கொட்டிய உப்பை பொதுமக்கள் போட்டிப் போட்டு அள்ளி சென்றனர். தூத்துக்குடி – திருச்செந்தூர் பிரதான சாலையில் எப்போதும் போக்குவரத்து மிகுந்து காணப்படும். இந்நிலையில. நேற்று காலை தெற்கு ஆத்தூர் அருகே சாலையில் சுமார் 500 மீட்டர் தூரம் வரை லாரியில் இருந்து உப்பு கொட்டியுள்ளது.

சாலையில் இடதுபுறம் முழுவதும் உப்பு கொட்டியதால் அந்த வழியாக சென்ற பைக்குகள், கார்கள் சற்று தடுமாற்றத்துடன் சென்றது.

இதனையறிந்த அப்பகுதி பொதுமக்கள் தங்களது வீட்டில் இருந்து சாக்குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் டப்பாக்களில் உப்பை அள்ளி சென்றனர்.

மேலும் மணல், உப்பு, ஜல்லி ஏற்றி செல்லும் கனரக வாகனங்கள் தார் பாய் கொண்டு முறையாக மூடி செல்வதற்கு உரிய நடவடிக்கை காவல்துறையினர் எடுக்க வேண்டுமென தெரிவித்தனர்.

# அண்ணாமலை மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கக்கோரி ஆவடி காவல் ஆணையரகத்தில் அதிமுக புகார்



சென்னை, ஆக. 31

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குறித்து பா.ஜனதா கட்சி மாநில தலைவர் அண்ணாமலை அவதூறாக பேசியதை கண்டித்து தமிழகம் முழுவதும் அண்ணாமலை உருவப்பொம்மையை எரித்து அதிமுகவினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

இந்த நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை அவதூறாக பேசிய பாஜக மாநில தலைவர் அண்ணாமலை மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கக்கோரி ஆவடி காவல் ஆணையரகத்தில் அதிமுக வழக்கறிஞர் பிரிவு சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

"எதிர்க்கட்சித் தலைவர்களை இழிவாக பேசி அதன் மூலம் விளம்பரம் தேடும் அண்ணாமலையை வன்மையாக கண்டிக்கிறோம். எடப்பாடி பழனிசாமியை பற்றி சட்டத்திற்கு புறம்பான, கடுமையான வார்த்தைகளால் பேசுவதற்கு அவருக்கு என்ன உரிமை உள்ளது? என்று அதிமுக வழக்கறிஞர் பிரிவு செயலாளர் டி. அறிவரசன் தெரிவித்துள்ளார்.

# சென்னை மாவட்ட இசேவை மையங்கள் மூலம் பொதுமக்கள் பயன்பெற்றிட சீர்மிகு நடவடிக்கைகள்




சென்னை, ஆக. 31

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஒரு அரசு துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் மூலமாக 530 அரசு இசேவை மையங்கள் மற்றும் 328 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுவருகிறது. அரசு இசேவை மையங்கள் மூலமாக வருவாய் துறை சார்ந்த சான்றிதழ்கள் மற்றும் சமுக நலன் சார்ந்த 170க்கும் மேற்பட்ட சேவைகளை ஆன்லைன் மூலமாக பதிவேற்றம் செய்து பொதுமக்களுக்கு சிறப்பாக வழங்கி வருகிறது.

இதேபோல நிரந்த ஆதார் சேர்க்கை மையங்கள் மூலமாக புதிய ஆதார் பதிவுகள் மற்றும் ஆதார் திருத்தங்கள் போன்ற சேவைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை மாவட்டத்தில் தலைமைச் செயலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், மற்றும் கோட்டம்/வார்டு அலுவலகங்களில் இசேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் சென்னை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசு இசேவை மையங்கள் மூலமாக வெளிமுகமை நிறுவனம் மூலம் தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்து வரும் தரவு உள்ளீட்டாளர்கள் மூலமாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளில் குறைபாடுகள் உள்ளதாக அரசின் கவனத்திற்கு வந்தது.

பொதுமக்களுக்கு சிறந்த முறையில் சேவை வழங்க ஏதுவாக, தற்போது சென்னை மாவட்டத்தில் ஒரே இடத்தில் நீண்ட காலமாகப் பணிபுரிந்து வரும் 44 அரசு இசேவை மையங்களைச் சார்ந்த முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தரவு உள்ளீட்டாளர்களை (Out Sourced Data Entry Operators) சென்னை மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கீழ் செயல்படும் அரசு இசேவை மையங்களுக்கு மாற்றம் செய்து நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளது.

# 'புதிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் நிதி தருவோம் என்பது நியாயமில்லை': சபாநாயகர் அப்பாவு



நெல்லை, ஆக. 31

நெல்லையில் சபாநாயகர் அப்பாவு இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"புதிய கல்விக் கொள்கையை மாநில அரசு ஏற்றுக்கொண்டால்தான் நாங்கள் நிதி தருவோம் என்று மத்திய அரசு கூறுவது நியாயமில்லை. அது மக்களின் வரிப்பணம். புதிய கல்விக் கொள்கையை ஏற்பதும், ஏற்காததும் இதற்கு தடையாக இருக்கக் கூடாது. புதிய கல்விக் கொள்கையில் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. அது குலக்கல்வி திட்டத்தை அடிப்படையாக கொண்டிருக்கிறது. அதனால் நாங்கள் புதிய கல்விக் கொள்கையை எதிர்க்கிறோம்." இவ்வாறு சபாநாயகர் தெரிவித்தார்.

# பொங்கலுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு தமிழக அரசு




சென்னை, ஆக. 31

2025 தைப் பொங்கல் திருநாளையொட்டி வழங்கப்படும் இலவச வேட்டி, சேலைகள் உற்பத்திக்காக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூ.100 கோடி வழங்க அனுமதியளித்து உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

பொங்கல் பண்டிகையின்போது, தமிழகம் முழுவதிலும் உள்ள நியாயவிலைக் கடைகளின் மூலம் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் ஏழைகளுக்கு இலவச வேட்டி சேலைகள் வழங்கப்பட்டு வருகிறது. இலவச வேட்டி சேலைகள் அனைத்தும் கைத்தறி மற்றும் பெடல் தறிகள் மூலம் உற்பத்தி செய்யப்படுவதால், கைத்தறி மற்றும் பெடல்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்புகளுக்கு இத்திட்டம் பெரிதும் உதவியாக இருக்கிறது.

இந்த நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறுவதை முன்னிட்டு இலவச வேட்டிசேலைதிட்டத்தின் கீழ் பொங்கல் பண்டிகைக்கு வழங்குவதற்குத் தேவைப்படும்வேட்டி சேலைகளை குறிப்பிட்ட காலத்துக்குள் உற்பத்தி செய்து வழங்கிட ஏதுவாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு முன்பணமாக வழங்கிட தமிழக முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் 100 கோடி ரூபாய் அனுமதித்து உத்தரவிட்டுள்ளார். இத்திட்டத்தின் மூலம் 2025 தைப் பொங்கல் திருநாளையொட்டி, தமிழகம் முழுவதிலும் உள்ள ஏழை மக்களுக்கு ஏறத்தாழ 1 கோடியே 77 லட்சத்து 64 ஆயிரம் சேலைகளும், அதேபோல ஏறத்தாழ 1 கோடியே 77 லட்சத்து 22 ஆயிரம் வேட்டிகளும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிலவுரிமையை காக்க போராடும் மக்கள் மீது பொய் வழக்கு புனைவதை அரசு கைவிட வேண்டும்: சீமான்

சென்னை. ஆக. 31

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பரந்தூரில்புதியவானூர்தி நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து 765 நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து போராடிவரும் மக்கள் மீது தி.மு.க. அரசு பொய் வழக்கு புனைந்து மிரட்டுவது கொடுங்கோன்மையாகும்.

காஞ்சிபுரம் மாவட்டம், பரந்தூரில் 4,550 ஏக்கர் பரப்பளவில் புதிய வானூர்தி நிலையம் அமைப்பதற்காக, ஏகனாபுரம் உட்பட 13க்கும் மேற்பட்ட கிராமங்களில் 3,250 ஏக்கர் விளைநிலங்களையும், 30க்கும் மேற்பட்ட நீர்நிலைகளையும், ஆயிரக்கணக்கான மக்கள் குடியிருப்புகளையும் அழித்து, நிலங்கள் கையகப்படுத்தப்படுவதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்து, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வருகின்றனர். ஆனால், போராடும் மக்களின் உணர்வையும், உரிமையையும் சிறிதும் மதியாது, ஆட்சி அதிகாரத் துணைகொண்டு மக்கள் போராட்டங்களை திராவிட மாடல் தி.மு.க. அரசு ஒடுக்கி வருகின்றது.

அதன் ஒரு பகுதியாக இன்று ( ஏகனாபுரம் பெண்கள், முதியவர்கள், விவசாயிகள் உட்பட போக்குவரத்திற்கு இடையூறு செய்ததாகவும், பொதுமக்கள் மீது பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்ததாகவும் தி.மு.க. அரசு பொய் வழக்குப்பதிவு செய்திருப்பது எதேச்சதிகாரத்தின் உச்சமாகும்.

விளை நிலங்களை அழிக்கும் திட்டங்களை தொடர்ந்து மக்கள் எதிர்த்து வரும் நிலையில் எதிர்க்கட்சியாக இருந்தபோது மக்களோடு நிற்பது போல் நாடகமாடியதி.மு.க., ஆட்சிக்கு வந்த பிறகு அடக்கி ஒடுக்குவது வாக்களித்த மக்களுக்கு செய்கின்ற பச்சைத்துரோகமாகும்.

ஜனநாயகநாட்டில் அமைதியான முறையில் அறவழியில், மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதும், குரலற்ற எளிய மக்களின் போராட்டத்திற்குத் தோள் கொடுத்துத் துணைநிற்பதென்பதும் அரசியலமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமையாகும். அதற்குக்கூட அனுமதி மறுத்து தி.மு.க. அரசு வழக்கு பதிவதென்பது வெட்கக்கேடானதாகும்.

மக்களாட்சி, கருத்துச் சுதந்திரம், பேச்சுரிமை குறித்தெல்லாம் மேடைக்கு மேடை பேசும் தி.மு.க. புகழ்பாடிகள் இதற்கு என்ன பதில் கூறப்போகிறார்கள்? இதுதான்திராவிடமாடலா? இதுதான் சமூக நீதியா?

எனவே, தமிழ்நாடு அரசு ஏகனாபுரம் பொதுமக்களை எவ்வித வழக்கும் பதியாமல் விடுவிக்க வேண்டுமெனவும், தங்களின் நில உரிமைக்காகப் போராடும் மக்களின் கோரிக்கைக்கு தமிழ்நாடு அரசு உடனடியாக செவி சாய்க்க வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பழைய ஓய்வூதிய திட்டம்: வருகிற 5ம் தேதி முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டம்



சென்னை, ஆக. 31

தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில பொதுச்செயலாளர் பொ.அன்பழகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தில் பல்வேறு குளறுபடிகள் உள்ளன. ஊழியர்களின் பணத்தை எடுத்து ஊழியர்களுக்கே தருவதாக அதனை பல்வேறு தரப்பினரும் விமர்சித்து வருகின்றனர். இந்த ஓய்வூதியத் திட்டம் பழைய திட்டத்துக்கு இணையாக இல்லை என்றாலும்கூட அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்திருக்கிறது. ஆனால், தமிழ கத்தில், பழைய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்படும் என திமுக தேர்தல் அறிக்கையில் அறிவித்துவிட்டு தற்போது தொடர்ந்து மௌனம் காக்கின்றது. இதனால் அரசு ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது. இத்தகைய சூழலில் தமிழகத்தில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வலியுறுத்தி தமிழ்நாடு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது. வரும் வருகிற 5ம் தேதி ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சி இல்லை; அதனால் கொண்டாட்டம் தேவையில்லை. அன்றைய தினம் கோரிக்கையை வலியுறுத்தி மாவட்ட தலைநகரங்களில் முதன்மைக் கல்வி அலுவகங்களின் அருகில் கோரிக்கை முழக்க போராட்டத்தை நடத்த வேண்டும்.

இது குறித்து வருகிற 1ம் தேதி ஈரோட்டில் நடைபெறவுள்ள மாநில செயற்குழு கூட்டத்தில் அனைத்து மாவட்ட நிர்வாகிகளின் கருத்துகளையும் உள்வாங்கி முறையான அறிவிப்பு செய்து போராட்டக் களத்துக்குச் செல்ல வேண்டும். இதன் மூலம் பிற ஆசிரியர் சங்கங்களையும் போராட்டத்துக்கு தயார் செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கும்பகோணம் அரசு கலைக்கல்லூரி மீண்டும் திறப்பு

கும்பகோணம், ஆக. 31

கும்பகோணத்தில் அரசு கலைக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த கல்லூரியில் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு முதுநிலை 2ம் ஆண்டு பேராசிரியை தகாத முறையில் பேசியதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பேராசிரியை மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மாணவர்கள் கல்லூரி முதல்வர் மாதவியிடம் புகார் அளித்தனர். ஆனால் இதுகுறித்து இது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த கல்லூரி மாணவ, மாணவிகள் வகுப்புகளை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

கும்பகோணம் அரசினர் கலைக்கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருவதன் காரணமாக, கல்லூரியின் அசாதாரண சூழல் கருதி, கல்லூரி ஆட்சி மன்ற குழுவின் தீர்மானத்தின்படி மறு உத்தரவு வரும் வரை கல்லூரி காலவரையின்றி மூடப்படுகிறது என கல்லூரி முதல்வர் மாதவி சுற்றறிக்கை மூலம் தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட பேராசிரியை ஈரோடு தாளவாடி அரசு கலைக்கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கல்லூரி கல்வி இயக்குநரின் உத்தரவை தொடர்ந்து வழக்கம்போல் இன்று கல்லூரி திறக்கப்பட்டுள்ளது.

# விடுதலை 2 படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




வெற்றிமாறன் இயக்கத்தில் சூரி, விஜய் சேதுபதி இணைந்து நடித்து கடந்த ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்ற படம் விடுதலை. இப்படத்திற்கு இளையராஜா இசையமைத்திருந்தார். இப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் வெளியாகும் எனப் படக்குழு அறிவித்த நிலையில், படத்திற்கு எதிர்பார்ப்பைக் கூட்டும் வகையில் முதல் பாகத்தின் இறுதியில் இரண்டாம் பாகத்தில் நடக்கும் சில காட்சிகளை வைத்திருந்தார் வெற்றிமாறன்.

இதையடுத்து, விடுதலை படத்தின் இரண்டாம் பாகத்திற்கான படப்பிடிப்பு தொடர்ந்து பல இடங்களில் நடைபெற்றது. இதில் விஜய் சேதுபதி, சூரி, எஸ்.ஜே சூர்யா மற்றும் மஞ்சு வாரியர், அட்டகத்தி தினேஷ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இதையடுத்து கடந்த மாதம் விடுதலை பாகம் 2 படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர்கள் வெளியானது. இரண்டு போஸ்டர்கள் வெளியான நிலையில் ஒரு போஸ்டரில் விஜய் சேதுபதியும் மஞ்சு வாரியரும் அன்பாக பேசிக்கொண்டிருக்கும் புகைப்படமும் மற்றொரு போஸ்டரில் விஜய் சேதுபதி ஆக்ரோஷமாக கையில் கத்தியுடன் இருக்கும் புகைப்படமும் வெளியானது. மேலும் போஸ்டரில் படப்பிடிப்பு இறுதிக் கட்டத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இப்படத்தின் ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு தற்போது வெளியாகியுள்ளது. அதன்படி வருகிற டிசம்பர் 20ஆம் தேதி வெளியாகவுள்ளதாகத் தெரிவித்து புதிய போஸ்டரையும் படக்குழு வெளியிட்டுள்ளது. இதனால் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# பிளாக் படத்தின் மூலம் கம்பேக் கொடுப்பாரா ஜீவா?




கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து தயாரித்த 'மாயா, 'மாநகரம்', 'மான்ஸ்டர்', 'டானாக்காரன்', 'இறுகப்பற்று' படங்கள் மக்கள் மத்தியிலும் பரபரப்பாக பேசப்பட்டு சூப்பர் ஹிட்டான படங்களை தயாரித்த நிறுவனம் பொட்டன்சியல் ஸ்டுடியோஸ்.

மீண்டும், வித்தியாசமான மற்றுமொறு தேர்ந்தடுத்த கதைக்கு "பிளாக்" என்று பெயர் வைத்துள்ளார்கள் .

ஒரே நாள் இரவில் நடக்கும் சம்பவம். இரண்டு கதாபாத்திரங்கள் மட்டுமே பிரதானம்.


நொடிக்கு நொடி திரில்லர். ஒரு குறிப்பிட்ட இடம் அனைவரையும் பயமுறுத்தலான இடமாக பார்க்க படும். அதில் நடக்கும் சம்பவங்கள் விசித்திரமானதாக இருக்கும். இதை பிறரிடம் சொன்னால் நம்ப முடியாத வகையிலும் இருக்கும். அப்படி பட்ட கதை தான் #பிளாக்.

நம்மை சூழ்ந்திருக்கும் இருளை பிளாக் என்று சொல்லலாம். யாரும் நம்மை எளிதில் புரிந்து கொள்ளாத அளவுக்கு நம்முடைய இன்னொரு கருப்பு பக்கத்தை காட்டிகொள்ளாமல் இருப்பதையும் பிளாக் என்று சொல்லலாம். இதுவே இக்கதைக்கு பொருந்தும்.. என்கிறார் டைரக்டர் கே.ஜி.பாலசுப்ரமணி

சென்னையில் எடுக்கப்பட்ட இப்படத்தின் படபிடிப்பு வேலைகள் முடிவடைந்து படம் வெளியீட்டு வேலைகள் நடை பெற்று வருகிறது. திரைப்படம் வரும் செப்டம்பர் மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் நாயகனாக ஜீவா நடிக்கிறார். இவரது ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடிக்கிறார்.

# கூலி படத்தில் நாகர்ஜூனா.. பிறந்த நாள் வாழ்த்துடன் சிறப்பு போஸ்டர் வெளியீடு




வேட்டையன் படத்தை தொடர்ந்து, நடிகர் ரஜினிகாந்த் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கூலி என்ற படத்தில் நடித்து வருகிறார். படத்தின் படப்பிடிப்பு பணிகள் தற்பொழுது விசாகப்பட்டினத்தில் நடைப்பெற்று வருகிறது. முதற்கட்டமாக ரஜினிகாந்த் சம்மந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டு வருகிறது. படத்தில் ஏற்கனவே சத்யராஜ், சுருதிஹாசன், பகத் பாசில், ரெபா மோனிகா ஜான் மற்றும் உபேந்திரா ஆகியோர் நடிப்பதாக தகவல் வெளியானது. கூலி படத்தில் நடிக்க இருக்கும் கதாபாத்திரம் குறித்த அப்டேட்டை படக்குழு தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. அதன்படி, மஞ்சுமெல் பாய்ஸ் படத்தில் நடித்து தமிழ் திரைத்துறையில் பிரபலமான சவுபின் ஷாஹிர், கூலி படத்தில் தயால் என்ற கதாபாத்திரத்தில் நடிப்பாக அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நடிகை ரச்சிதா ராம் நடிப்பதாக தகவல் வெளியான நிலையில், தற்போது தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகர் நாகர்ஜூனா கூலி படத்தில் சைமன் என்ற கதாபாத்திரத்தில் நடிப்பதாக படக்குழு அறிவித்து இருக்கிறது. இதோடு நடிகர் நாகர்ஜூனாவுக்கு பிறந்தநாள் வாழ்த்தும் தெரிவித்துள்ளது.

# இந்தியப் பணக்காரர்கள் பட்டியலில் ஷாருக் கான்.. சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா?



இந்தியப் பணக்காரர்கள் பட்டியலில் பாலிவுட் நடிகர் ஷாருக் கான் இடம்பிடித்துள்ளார். 2024 ஹூருன் இந்தியப் பணக்காரர்கள் பட்டியல் வெளியாகி உள்ளது. அதில் முதல் முறையாக இடம்பிடித்துள்ள நடிகர் ஷாருக் கானின் சொத்து மதிப்பு ரூ. 7 ஆயிரத்து 300 கோடி ஆகும்.

திரைத்துறை மட்டுமின்றி பல்வேறு தொழில்களில் நடிகர் ஷாருக் கான் தீவிரமாக கவனம் செலுத்தி வருவதே இதற்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. உலகளவில் பிரபலமான ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மற்றும் சொந்த படத்தயாரிப்பு நிறுவனம் ரெட் சில்லீஸ் என்டர்டெயின்மென்ட் உள்ளிட்டவை ஷாருக் கானுக்கு சொந்தமானவை ஆகும்.

தற்போது வெளியாகி இருக்கும் இந்தியப் பணக்காரர்கள் பட்டியலில் பாலிவுட் நடிகர் ஷாருக் கான் மட்டுமின்றி பாலிவுட்துறையை சேர்ந்த மேலும் சிலரும் இடம்பெற்றுள்ளனர். இவர்களின் பட்டியல் பின்வருமாறு..

ஷாருக் கான் மற்றும் குடும்பத்தார் மொத்த சொத்து மதிப்பு ரூ. 7 ஆயிரத்து 300 கோடி, ஜூஹி சாவ்லா மற்றும் குடும்பத்தார் மொத்த சொத்து மதிப்பு ரூ. 4 ஆயிரத்து 600 கோடி, ஹிருத்திக் ரோஷன் மொத்த சொத்து மதிப்பு ரூ. 2 ஆயிரம் கோடி, அமிதாப் பச்சன் மற்றும் குடும்பத்தர் மொத்த சொத்து மதிப்பு ரூ. 1,600 கோடி, கரண் ஜோஹர் மொத்த சொத்து மதிப்பு ரூ. 1,400 கோடி

# தமிழ் திரை உலகிலும் பாலியல் தொல்லைகள் நிறைய இருக்கிறது... ஷகிலா பரபரப்பு பேட்டி



மலையாள திரை உலகில் நடிகைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் பற்றிய ஹேமா கமிட்டி அறிக்கை வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த விவகாரத்தால் திரை உலகமே நிலை குலைந்து போய் உள்ளது. இந்த சம்பவத்தால் மலையாள திரை உலக அமைப்பான அம்மா அமைப்பு தலைவர் பதவியில் இருந்து நடிகர் மோகன்லால் உள்பட நிர்வாகிகள் ராஜினாமா செய்தனர்.

கேரளாவில் திடீரென வெடித்துள்ள இந்த சம்பவம் அங்கு மட்டுமின்றி அனைத்து திரை உலகிலும் பேசும் பொருளாக மாறி உள்ளது. சில தினங்களாக ஒவ்வொரு நாளும் பல நடிகைகள் புதிய பாலியல் குற்றச்சாட்டுகளை வெளியிட்டு வருகின்றனர்.

அந்த வகையில் இந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் நடிகை ஷகிலா தனியார் சேனலுக்கு அளித்துள்ள பேட்டி வருமாறு:

மலையாள திரை உலகில் இருப்பது போன்று தமிழ் திரையுலகிலும் இந்த பிரச்சனை உள்ளது. குறிப்பாக தெலுங்கு திரை உலகில் இதைவிட அதிகமாகவே இருக்கிறது.

இந்தியை பொறுத்தவரை அப்படி அல்ல. அவர்கள் உடனே நண்பர்களாக மாறி விடுவார்கள். எனவே அங்கு பெரிதாக காஸ்டிங் கோச் பிரச்சனை இருக்காது. ஆனால் அங்கு நெபாடிசம் பிரச்சனை உள்ளது.

அதாவது புதிய நடிகர்கள் யாரையும் வளரவிடாமல் தங்களின் வாரிசுகளையே முன்னணி நடிகர்களாக்க முயற்சிப்பது போன்ற பிரச்சனை உள்ளது.

தெலுங்கில் வேற லெவலில் இதுபோன்ற பாலியல் பிரச்சனைகள் உள்ளது. இவை எல்லாம் பேசி வைத்துக் கொண்டுதான் செய்யப்படுகிறது. ஆரம்பத்திலேயே தயாரிப்பாளருக்கும் தனக்கும் அட்ஜெஸ்ட்மெண்ட் பண்ண வேண்டும் என நடிகையின் மேனேஜரிடம் பேசி விடுவார்கள். இதற்கு சம்மதித்துதான் அந்த நடிகை படத்தில் நடிப்பார். முக்கால்வாசி படம் முடிந்த பின்னர் அவர்களால் தன்னை படத்தில் இருந்து வெளியேற்ற முடியாது என்பதால் நடிகைகள் ஒத்துழைக்க மறுப்பார்கள். இதன் காரணமாக பல பிரச்சனைகள் வருகிறது.

குடும்ப சூழலால் பாலியல் தொல்லைகளை சிலர் வெளியே சொல்லாமல் இருக்கின்றனர். யாரும் பேசா விட்டால் எந்த தீர்வும் கிடைக்காது. பூனைக்கு யாராவது மணிக்கட்டியே தீர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பாரா ஒலிம்பிக் போட்டி: ஒரே புள்ளியில் உலக சாதனையை தவற விட்ட இந்திய வீராங்கனை



17 ஆவது பாரா ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிசில் கோலாகலமாக தொடங்கி நடைபெற்று வருகிறது. மாற்றுத்திறனாளிகள் பங்கேற்கும் இந்த பாரா ஒலிம்பிக் தொடரின் தொடக்க விழாவை பிரான்ஸ் சிறப்பாக நடத்தியது.

இதில் 167 நாடுகளை சேர்ந்த 4,400 போட்டியாளர்கள் பங்கேற்று இருக்கிறார்கள். இதில் பாரா ஒலிம்பிக் வரலாற்றிலே அதிகபட்சமாக 84 வீரர் வீராங்கனைகளை இந்தியா இம்முறை அனுப்பி இருக்கிறது. இந்த நிலையில், இந்திய வில் வித்தை வீராங்கனை ஷீத்தல் தேவி ஒருபுள்ளியில் உலக சாதனையை தவறவிட்டுள்ளார்.

தகுதிச் சுற்றில் அற்புதமாக விளையாடிய ஷீத்தல் 703 புள்ளிகளை பெற்றார். எனினும், 704 புள்ளிகளை பெற்ற துருக்கி வீராங்கனை சாதனை படைத்தார். ஒருபுள்ளியில் உலக சாதனையை தவறவிட்ட போதிலும், வில் வித்தையில் 700 புள்ளிகளை கடந்த முதல் இந்திய பாராலிம்பிக் வீராங்கனை என்ற பெருமையை ஷீத்தல் பெற்றுள்ளார்.

# இங்கிலாந்துக்காக அதிக சதங்கள்: அலெஸ்டர் குக் சாதனையை சமன் செய்த ஜோ ரூட்




இலங்கை அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி லார்ட்ஸ் மைதானத்தில் இன்று தொடங்கியது. டாஸ் வென்ற இலங்கை அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, இங்கிலாந்து அணி முதலில் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் டேனியல் லாரன்ஸ் 9 ரன்னிலும், கேப்டன் ஒல்லி போப் ஒரு ரன்னிலும் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தனர். மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் பென் டக்கெட் 40 ரன்னில் அவுட்டானார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் பொறுப்புடன் விளையாடி சதமடித்த ஜோ ரூட், 33வது சதத்தை பதிவு செய்தார். அப்போது இங்கிலாந்து 67 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 253 ரன்கள் எடுத்திருந்தது.

இதன்மூலம் இங்கிலாந்து அணிக்காக அதிக சதமடித்தவர் என்ற அலெஸ்டர் குக் சாதனையை ஜோ ரூட் சமன் செய்துள்ளார்.

# வங்கதேசத்துக்கு எதிரான 2வது டெஸ்ட்: பாகிஸ்தான் முக்கிய வீரர் அதிரடி நீக்கம்




பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட வங்கதேச அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்டில் பாகிஸ்தான் அணி தோல்வி அடைந்து ரசிகர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

இந்த போட்டி முடிவடைந்த நிலையில், பாகிஸ்தான் கேப்டன் ஷான் மசூதை வேகப்பந்து வீச்சாளர் ஷாஹீன் அப்ரிடி திட்டியதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, பாகிஸ்தான்வங்கதேசம் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை தொடங்குகிறது.

இந்நிலையில், வங்கதேசத்துக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் இருந்து ஷாஹீன் அப்ரிடி அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். இது ரசிகர்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

இதுதொடர்பாக, பாகிஸ்தான் அணியின் தலைமை பயிற்சியாளர் ஜேசன் கில்லஸ்பி கூறுகையில், ஷாஹீன் அப்ரிடி பந்துவீச்சில் சில குறை இருப்பதால் அதனை நிவர்த்தி செய்வதற்காக பயிற்சி செய்யப் போகிறார். மேலும், அவருக்கு தற்போது குழந்தை பிறந்திருப்பதால் அவர் குழந்தையுடனும் நேரம் செலவிட வேண்டும் என்பதற்காக நேரம் ஒதுக்கி கொடுத்துள்ளோம் என தெரிவித்தார்.

முதல் டெஸ்ட் போட்டியில் சுழற் பந்துவீச்சாளர்கள் இல்லாமல் களமிறங்கிய பாகிஸ்தான், 2வது டெஸ்டில் அப்ரார் அகமத் என்ற லெக் ஸ்பின்னரையும், மிர் ஹம்ஸா என்ற வேகப்பந்துவீச்சாளரையும் சேர்த்துள்ளது.

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை: முதலிடத்தை தக்கவைத்துள்ள அஸ்வின்




டெஸ்ட் பந்துவீச்சாளர்கள் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. இதில் இந்திய வீரர் அஸ்வின் 870 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

ஆஸ்திரேலிய வீரர் ஜோஷ் ஹேசில்வுட் 847 புள்ளிகளுடன் 2வது இடத்திலும், இந்திய வீரர் பும்ரா 847 புள்ளிகளுடன் 3வது இடத்திலும் உள்ளனர். மற்றொரு இந்திய வீரரான ஜடேஜா 788 புள்ளிகளுடன் 7வது இடத்தில் உள்ளார்.

ஆல்ரவுண்டர் தரவரிசையில் ஜடேஜா 444 புள்ளிகளுடன் முதலிடத்திலும், அஸ்வின் 322 புள்ளிகளுடன் 2வது இடத்திலும், அக்சர் படேல் 6வது இடத்திலும் நீடிக்கின்றனர்.

ஏற்கனவே பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் இந்திய வீரர்கள் ரோகித் சர்மா, ஜெய்ஸ்வால், விராட் கோலி ஆகியோர் 6, 7, 8வது இடம் பிடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐசிசி தலைவராக தேர்வாகி இருக்கும் ஜெய் ஷா சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா?



பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா கடந்த சில நாட்களுக்கு முன்பு தான் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைவராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். மேலும், இளம் வயதில் ஐசிசி தலைவராக தேர்வு செய்யப்பட்டவர் என்ற பெருமையை ஜெய் ஷா பெற்று இருக்கிறார்.


கிரெக் பார்கிலேவை தொடர்ந்து, வருகிற டிசம்பர் 1 ஆம் தேதி முதல் ஐசிசி தலைவராக பொறுப்பேற்க இருக்கும் ஜெய் ஷாவின் சொத்து மதிப்பு ரூ. 124 கோடி என தகவல் வெளியாகி உள்ளது.

கிரிக்கெட் கூட்டமைப்பு வருவாய் தவிர ஜெய் ஷா, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி துறையில் இயங்கி வரும் நிறுவனத்தில் இயக்குநராக இருக்கிறார். மேலும், குசும் ஃபின்சர்வ் என்ற நிறுவனத்தில் 60 சதவீத பங்குகளை ஜெய் ஷா தன் வசம் வைத்திருப்பதாக கூறப்படுகிறது.

மாத சம்பளத்தை பொருத்தவரை பிசிசிஐ தனது அதிகாரிகளுக்கு மாத சம்பளம் வழங்குவதில்லை. மாறாக தினசரி படி வழங்குகிறது. அதன்படி ஆலோசனை கூட்டங்கள் வெளிநாடுகளில் நடைபெறும் பட்சத்தில் நாள் ஒன்றுக்கு ரூ. 40 ஆயிரம் துவங்கி ரூ. 80 ஆயிரம் வரை வழங்கப்படுகிறது.

"கிரிக்கெட்டை உலகம் முழுக்க கொண்டு சேர்ப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நிச்சயம் எடுப்பேன் என்று உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். மிகமுக்கிய பதவியை ஏற்கும் தருவாயில், நீங்கள் வைத்துள்ள அதீத எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்காகவும், கிரிக்கெட் எனும் அழகிய போட்டிக்காக என்னை முழுமையாக அர்ப்பணிக்கிறேன்," என்று ஜெய் ஷா தெரிவித்து இருந்தார்.

# அமெரிக்க ஓபன்: ஸ்ரீராம் பாலாஜி ஜோடி முதல் சுற்றில் போராடி வெற்றி



நடப்பு ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயார்க்கில் நடந்து வருகிறது.

இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் நடந்த முதல் சுற்றில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, அர்ஜென்டினாவின் கிடோ ஆன்ட்ரியோஸ் ஜோடி, நியூசிலாந்தின் மார்கஸ் டேனியல், மெக்சிகோவின் ரேயஸ் வரெலா ஜோடியுடன் மோதியது.

இதில் ஸ்ரீராம் பாலாஜி ஜோடி 57, 61, 76 (1210) என்ற செட்களில் போராடி வென்றதுடன், அடுத்த சுற்றுக்கும் முன்னேறியது.

ஏற்கனவே யூகி பாம்ப்ரி ஜோடி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.